www.agaram.lk

0017

AL/2017/45/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

බෞද්ධ ශිෂ්ටාචාරය I
பௌத்த நாகரிகம் I
Buddhist Civilization I

45 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** வைதிக இலக்கியத்தில் இடம்பெறும் படைப்புக் கொள்கையில் **அடங்காத** இரண்டு குலப் பெயர்களாவன,
(1) சாக்கிய, பிராமண என்பனவாகும்.
(2) சாக்கிய, சத்திரிய என்பனவாகும்.
(3) சாக்கிய, வைஷ்ய என்பனவாகும்.
(4) சாக்கிய, சூத்திர என்பனவாகும்.
(5) சாக்கிய, கோலிய என்பனவாகும்.

**2.** பிராமண போதனையின்படி பிறப்பை அடிப்படையாகக் கொண்டு மனித வர்க்கத்தை உயர்ந்தவர், தாழ்ந்தவர் என வகைப்படுத்துவதனைக் கண்டித்து மனிதனின் உடல் ரீதியான ஒத்ததன்மையைக் எடுத்துக்காட்டி, புத்தர் வாஸெட்ட சூத்திரத்தில் முன்வைத்துள்ள விடயம்,
(1) ஒழுக்கவியலாகும்.
(2) உயிரியலாகும்.
(3) சமூகவியலாகும்.
(4) சூழலியலாகும்.
(5) வரலாற்றியலாகும்.

**3.** 'ஸ்வதர்ம' கொள்கையின்படி பிராமண வர்ணத்தினரால் மட்டும் நிறைவேற்றப்படவேண்டிய இரண்டு ஸ்வதர்மங்களாக இனங்காணத்தக்கவை
(1) யாகம் செய்வித்தலும் யாகம் செய்தலும்
(2) யாகம் செய்வித்தலும் கொடை வழங்கலும்
(3) யாகம் செய்வித்தலும் விவசாயமும்
(4) யாகம் செய்வித்தலும் வேதம் கற்றலும்
(5) யாகம் செய்வித்தலும் கொடைகளை ஏற்றுக்கொள்ளலும்

**4.** பிராமண போதனையின்படி 'ஆபத்தர்ம' பற்றிய **தவறான** கூற்றாவது
(1) சத்திரியருக்குரிய பணிகளைப் பிராமணர் செய்யமுடியும்.
(2) வைசிகருக்குரிய பணிகளைப் பிராமணர் செய்யமுடியும்.
(3) பிராமணருக்குரிய பணிகளைச் சத்திரியர் செய்யமுடியும்.
(4) வைசிகருக்குரிய பணிகளைச் சத்திரியர் செய்யமுடியும்.
(5) சூத்திரருக்குரிய பணிகளை வைசிகர் செய்யமுடியும்.

**5.** பிராமண போதனையின்படி பெண்கள் எதுவித சமய, சமூக உரிமைகளற்றவர்களாகவும் வெகுளித்தனமானவர்களாகவும் கருதப்பட்டாலும் இந்திய வரலாற்றில் ஒரு சில காலங்களில் அவர்கள் ஆண்களைப் போன்று சகல உரிமைகளையும் அனுபவித்தார்கள் என்பது வரலாற்றுத் தகவல்கள் மூலம் நிருபணமாகின்றது. மேலும் பெண்கள் சகல சுகபோகங்களையும் வழங்கும் செல்வாக்கின் குறியீடாகக் கருதப்பட்டமையையும் ஆதாரங்கள் வலியுறுத்துகின்றன. அதற்கிணங்க இந்திய வரலாற்றில் பெண்கள் வணக்கத்திற்குரிய நிலையில் வைக்கப்பட்டிருந்தமைக்குத் தெளிவான தொல்பொருள் சான்றுகள் கிடைப்பது,
(1) வேதகாலத்திற்கு முற்பட்ட காலத்திலாகும்.
(2) வேத மந்திர காலத்திலாகும்.
(3) ஆரண்யக காலத்திலாகும்.
(4) உபநிடதக் காலத்திலாகும்.
(5) வேத காலத்திலாகும்.

**6.** சமயப் போதனையாளர் அறுவரில் எதுவித மாற்றமும் செய்யப்பட முடியாத என்றுமுள்ள ஆத்மா என்றதொரு விடயம் உள்ளது எனப் போதிக்கும் போதனையாளர்
(1) பகுட கச்சாயனர்
(2) அஜித கேஷகம்பலீன்
(3) பூரண கஸ்ஸபர்
(4) மக்கலீ கோஸலர்
(5) நிகண்ட நாத புத்தர்

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



7. படைப்புக் கோட்பாட்டை மறுப்பதற்குச் சமண மரபினர் அறிமுகப்படுத்தும் பிரதானமான போதனையாகக் கருதப்படத்தக்கது
(1) ஈஷ்வர நிர்மாண வாதம் (2) அனீஷ்வர வாதம் (3) நித்யாத்ம வாதம்
(4) பிரம்ம, ஆத்ம ஒருமைவாதம் (5) அமரவிக்ஷேப வாதம்

8. பௌத்த சமயத்திலும் வைணவ சமயத்திலும் கர்மம் பற்றிய போதனை அடிப்படைக் கோட்பாடாகும். இதனடிப்படையில் மேல்வரும் கூற்றுகளுள் பௌத்த சமயத்திற்குப் மிகப் பொருந்துவது,
(1) முன்பு செய்த கர்மத்தின் காரணமாக எல்லாம் நடக்கின்றது.
(2) முன்பு செய்த கர்மத்தின் காரணமாக எதுவும் நடப்பதில்லை.
(3) கர்மத்தின் விதைகள் யாவும் ஆத்மாவுடன் கட்டுண்டு பிறவி தோறும் பயணிக்கும்.
(4) உடல் ரீதியான கர்மா மிக முக்கியமானது.
(5) மனரீதியான கர்மா மிக முக்கியமானது.

9. புத்தர் கால இந்தியாவில் இருந்த பதினாறு ராச்சியங்களுள் முடியாட்சிக்கு **உட்படாத** ராச்சியம்
(1) மகத ராச்சியம் (2) வஜ்ஜி ராச்சியம் (3) கோசல ராச்சியம்
(4) அவந்தி ராச்சியம் (5) வத்ஸ ராச்சியம்

10. ஈஸ்வர நிர்மாண வாதத்தை நிராகரிக்கும் விடயத்தில் மிகப் பொருத்தமான பௌத்த போதனையெனக் கொள்ளத்தக்கது,
(1) கர்ம வாதம் (2) அநாத்ம வாதம்
(3) காரண காரிய வாதம் (4) அதிச்சஸமுப்பன்ன வாதம்
(5) நிலையின்மை பற்றிய சித்தாந்தம்

11. சமூகத்தின் தோற்றம், பரம்பல் பற்றிய பௌத்த கொள்கையை விளக்கும் அக்கஞ்ஞ சூத்திரம் பிரதிபலிக்கும் கருத்துக்களின்படி மேல்வருவனவற்றுள் எந்தக் கூற்று மிகச் சரியானது?
(1) அது சூழற் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டதொன்றாகும்.
(2) அது உளவியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டதொன்றாகும்.
(3) அது உளவியல் ரீதியான சூழற் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டதொன்றாகும்.
(4) அது எல்லாம் வல்ல இறைவனொருவனின் ஆதிக்கம் இன்றித் தானாக ஏற்பட்டதொன்றாகும்.
(5) அது படிச்சசமுப்பாத மூலதர்மத்தின்படி சூழல், உளவியல் ஆகியன சார்ந்ததாக ஏற்பட்டதொன்றாகும்.

12. வைதிக இலக்கியத்தின்படி, உயிரினங்களும் உலகமும் எல்லாம் வல்ல இறைவன் ஒருவனால் படைக்கப்பட்டு ஆளப்பட்டு வருவதாக புராதன இந்தியர் நம்பினர். இந்த நம்பிக்கையை எவ்வாறு அழைப்பர்?
(1) நியதி வாதம் (2) பலதெய்வ வாதம்
(3) ஈஸ்வர நிர்மாண வாதம் (4) அடிப்படைக் காரண வாதம்
(5) நித்யாத்ம வாதம்

13. மக்களின் எண்ணங்கள், ஆற்றல்கள் ஆகியவற்றை இனங்கண்டு விவசாயத்தில் ஈடுபாடு உடையவர்களுக்கு விதை, உணவு என்பனவும் வியாபாரத்தில் ஈடுபாடு கொள்வோருக்கு மூலதனமும் அரச சேவையில் ஆர்வமுள்ளவர்களுக்கு உணவும் ஊதியமும் வழங்குவதற்கு ஊக்கமளிக்கின்ற பௌத்த அரசியல் அடிப்படைத் தர்மம் இடம்பெறுவது,
(1) ஜாதகபாளியில் ஆகும். (2) சக்கவத்தசீஹநாத சூத்திரத்தில் ஆகும்.
(3) மஹாபரிநிப்பான சூத்திரத்தில் ஆகும். (4) அக்கஞ்ஞ சூத்திரத்தில் ஆகும்.
(5) கூட்டதந்த சூத்திரத்தில் ஆகும்.

14. சமூக விழுமியம், சமூக நன்னடத்தை ஆகியவற்றுக்கு பௌத்த போதனைகளிலிருந்து கிடைக்கக்கூடிய வழிகாட்டல்கள் மிகவும் முக்கியமானவை. தானம், ஒழுக்கம், தியானம் என்றவாறு அடிப்படையில் போதிக்கப்படுகின்ற பௌத்த விழுமியங்கள் ஆரிய மார்க்கத்தில் ஒழுக்க, சமாதி, பஞ்ஞா ஆகிய திரிசிக்ஷாவில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சமூக ஒழுக்கவியல், நன்னடத்தை ஆகியவற்றிற்கு அத்தியாவசியமான பௌத்த விழுமியங்களாகக் கருதப்படக்கூடியது,
(1) தானம் (2) ஒழுக்கம்
(3) தியானம் (4) யோனிஸோமனசிகார
(5) மன ஒருமைப்பாடு

15. சிகாலோவாத சூத்திரத்தில் குறிப்பிடப்படும் ஆறு திசைகளுக்குரியதான கடமைகள், பொறுப்புக்களுள் அடங்கும் பாவங்களைத் தவிர்த்தல்
(1) சந்நியாச பிராமணர்களதும் பெற்றோர்களதும் பொறுப்பாகும்.
(2) சந்நியாச பிராமணர்களதும் ஆசிரியர்களதும் பொறுப்பாகும்.
(3) சந்நியாச பிராமணர்களதும் வேலை கொள்வோரதும் பொறுப்பாகும்.
(4) சந்நியாச பிராமணர்களதும் நல்ல நண்பர்களதும் பொறுப்பாகும்.
(5) சந்நியாச பிராமணர்களதும் கணவர்களதும் பொறுப்பாகும்.

16. அரச நிர்வாகத்தில் வயது முதிர்ந்தவர்களுக்கு மதிப்பளிப்பதிலும் அவர்களது அறிவுரைகளையும் கருத்துக்களையும் கேட்டறிதலிலும் கவனம் செலுத்த வேண்டுமென வற்புறுத்துவது
(1) சதர சங்கிரகவஸ்து (2) சதர அகதி
(3) சப்த அபரிஹானிய தர்மங்கள் (4) தஸராஜ தர்மங்கள்
(5) தஸ சக்விதிவத்

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



17. "தர்மத்தையே உறவாக்கி, தர்மத்தையே போஷித்து, தர்மத்துக்கே மதிப்பளித்து, தர்மத்தையே பூசித்து, தர்மத்தையே பணிந்து, தர்மத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்து... தர்மத்தையே அதிபதியாகக் கொண்டு மக்களிடத்தும், படைகளிடத்தும், சிற்றரசர்களிடத்தும், துறவிகள், மன்னர்களிடத்தும், பிராமணர்களிடத்தும், இல்லறத்தாரிடத்தும், கிராமவாசிகளிடத்தும், நகர வாசிகளிடத்தும் மிருகங்கள், பறவைகளிடத்தும் அன்பு பாராட்டி நடவுங்கள்."
மேலுள்ள பகுதியில் கூறப்பட்டவற்றுள் சக்விதிவத்தில் உள்ளடங்கியிருப்பது
(1) ஒன்று (2) ஏழு (3) எட்டு
(4) ஒன்பது (5) பத்தும்

18. சட்டத்திற்குட்பட்டதும் அமைதி பற்றியதுமான பௌத்த போதனைகளுக்கமைவாக மேல்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்றாகக் கொள்ளக்கூடியது.
(1) பௌத்த சமயத்தில் சட்டத்துக்கு மதிப்பளித்தல் அபரிஹானீய தர்மமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.
(2) பௌத்த சமயம் தண்டனையை மறுக்கின்றது.
(3) தண்டனையளித்தல் சமூக நன்னடத்தைக்கு இன்றியமையாத காரணியாகும்.
(4) தவறு செய்யத் தூண்டும் காரணங்களை இல்லாதொழித்து குற்றங்களைக் களைதல் வேண்டும்.
(5) நன்னடத்தையை வளர்த்தெடுப்பதன் மூலம் சமூகக் குற்றங்கள் யாவற்றையும் இல்லாதொழித்தல் வேண்டும்.

19. பௌத்த சிராவக சமூகமானது ஆன்மீக வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகைக்குட்பட்டுள்ளது. அவற்றுள் ஆர்ய சிராவகர்கள்
(1) பிக்கு, பிக்குணி, உபாஸகர், உபாஸிகை என்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
(2) ஸோவான், ஸகதாகாமி, அநாகாமி, அரகந்த என்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
(3) புத்த, பஸேபுத்த, மஹாஹத், சக்விதி அரசன் என்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
(4) அர்த்த, தர்ம, நிருக்தி, படிபாணலாபீ என்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
(5) பதம, துதிய, ததிய, சதுத்த த்யாண லாபீ என்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

20. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று வாயில்களினாலும் செய்யப்படும் பத்து தீயசெயல்கள் உண்டென்றும் அவை 'தஸ அகுஸல' என அழைக்கப்படுவன என்றும் பௌத்த சமயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பத்து பாவங்களும் செய்யப்படுவது,
(1) காயத்தினால் மூன்றும் வாக்கினால் மூன்றும் மனத்தினால் நான்குமாகும்.
(2) காயத்தினால் நான்கும் வாக்கினால் மூன்றும் மனத்தினால் மூன்றுமாகும்.
(3) காயத்தினால் மூன்றும் வாக்கினால் நான்கும் மனத்தினால் மூன்றுமாகும்.
(4) காயத்தினால் நான்கும் வாக்கினால் நான்கும் மனத்தினால் இரண்டுமாகும்.
(5) காயத்தினால் நான்கும் வாக்கினால் இரண்டும் மனத்தினால் நான்குமாகும்.

21. பௌத்த பகுப்பாய்வின்படி, சிந்தனையடிப்படையிலோ அறத்தின் அடிப்படையிலோ செய்யப்படும் நல்லது, கெட்டது என ஒருவரது செயல்கள் சில நியதிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன. இங்கு இத்தகையதொரு நியதி அடிப்படை எனக் கொள்ள **முடியாத** தர்ம பரியாயமாவது,
(1) சகல சம்ஸ்கார தர்மங்களும் நித்தியமற்றவை.
(2) இனிமையல்லாத விளைவுகளையுடைய செயல்களைச் செய்யக்கூடாது.
(3) தன்னை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்க வேண்டும்.
(4) தனக்கும் பிறருக்கும் உண்டாகும் நன்மை தீமைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.
(5) தனது மனச்சாட்சிக்கேற்ப தீர்மானம் எடுக்கவேண்டும்.

22. குழுவொன்றின் நோக்கம், குறிக்கோள் என்பவற்றை அடைந்துகொள்வதற்காக கெட்டித்தனமாகவும் அறிவுபூர்வமாகவும் பௌதிக, மனித வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துதலை 'முகாமைத்துவம்' என வரைவிலக்கணப்படுத்தலாம். பௌத்த மதத்திலும் முறைப்படியான முகாமைத்துவப் படிமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவென ஆதாரங்களின் அடிப்படையிலான தகவல்கள் தெரிவிக்கின்றன. புத்தர் போதித்த பௌத்த சங்கச் சொத்து முறையும் வெற்றிகரமானதொரு முகாமைத்துவக் கோட்பாடாகுமென இனங்காணக்கூடியதாயுள்ளதுடன் அது,
(1) மனித வள முகாமைத்துவத்திற்கு உதாரணமாகக் காட்டப்படலாம்.
(2) ஆன்மீக முகாமைத்துவத்திற்கு உதாரணமாகக் காட்டப்படலாம்.
(3) பௌதிக வள முகாமைத்துவத்திற்கு உதாரணமாகக் காட்டப்படலாம்.
(4) ஆளணி முகாமைத்துவத்திற்கு உதாரணமாகக் காட்டப்படலாம்.
(5) சூழல் முகாமைத்துவத்திற்கு உதாரணமாகக் காட்டப்படலாம்.

23. புத்தரும் ஆசைகளை அகற்றிய பிக்குகளும் பிக்குணிகளும் உலகின் இனிமையை அனுபவித்த வகையினை பௌத்த ஆதாரங்களில் காணமுடியும். அழகியல் தொடர்பிலான பௌத்த பகுப்பாய்வின்படி இது,
(1) அனுபாதான ரசனை ஆகும். (2) அழகியல் ரசனை ஆகும்.
(3) உபாதா ரசனை ஆகும். (4) சிருங்கார ரசனை ஆகும்.
(5) இன்ப ரசனை ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



24. "ஸ்வாமி, மஹா பிரஜாபதீ கோதமீ பாக்கியவானாகிய தங்களுக்குப் பல உதவிகள் செய்தார். அவர் தங்களின் சிறிய தாயார். தங்களை நன்கு வளர்த்தவர். பாலூட்டியவர். தங்கள் தாயார் இறந்த காலத்திலிருந்து தங்களுக்குப் பாலூட்டினார். ஆகையினால் பெண்களுக்குத் துறவு நிலையைக் கொடுப்பது நல்லது" என்ற சுல்லவக்க பாளியில் வரும் மேலுள்ள கூற்று வண. ஆனந்த தேரரினால் மஹா பிரஜாபதீ கோதமீ உள்ளிட்ட குழுவினரை பௌத்த சங்கத்தில் துறவு நிலைப்படுத்தும்படி புத்தர் வேண்டப்பட்டபோது கூறப்பட்டது. இந்த நிகழ்வு இடம்பெற்றது,
(1) சிராவஸ்தி நகரத்து ஜேதவனாராமயவில் ஆகும்.
(2) கோசாம்பி நகரத்து கோஷிதாராமயவில் ஆகும்.
(3) ரஜகஹா நகரத்து வேலுவனாராமயவில் ஆகும்.
(4) விசாலா நகரத்து கூடாகார மண்டபத்தில் ஆகும்.
(5) கபிலவஸ்து நகரத்து நிக்ரோதாராமயவில் ஆகும்.

25. ஒவ்வொரு புலத்திலும் விசேட தகைமைகளைக் கொண்ட சிராவகர்களை இனங்கண்ட புத்தர் அவர்களை உயரிய பதவிகளில் நியமித்தார். இதற்கமைவாக, துதங்கதாரிகளுள் உயரிய பதவி வழங்கப்பெற்றவர்
(1) அஞ்ஞா கொண்டக்ஞ மகாதேரர் (2) சாரீபுத்த மகாதேரர்
(3) மொக்கல்லான மகாதேரர் (4) சுல்லபந்தக மகாதேரர்
(5) மஹா காஸ்யப மகாதேரர்

26. பல புனிதமான மனிதர்களால் புகழப்பட்ட புத்தர், விங்சாமானவிகா, அக்ரோஷ பரிபிராஜக போன்ற துறவிகளின் நிந்தனைக்கும் பழிப்புக்கும் இலக்கானார். சுகத்தில் பரம மகிழ்ச்சியையோ கஷ்டத்தில் கலக்கத்தையோ அடையாத புத்தர் எல்லாவற்றையும் சமரசமான உள்ளத்துடன் சகித்துக் கொண்டார். இதன் மூலம் வெளிப்படுவது புத்தரின்,
(1) உயர்வான இரக்க குணம் (2) அரகம் குணம் (3) பகவா குணம்
(4) தாதீ குணம் (5) சமத்துவ குணம்

27. அந்தந்தத் திசைகளிலும் குடியேற்றங்களிலும் நற்குடியைச் சேர்ந்த சிறுவர்களை துறவு உபசம்பதா செய்வதற்குப் பிக்கு சங்கத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டதுடன் பயன்பாட்டிற்கு வந்த உபசம்பதா மரபு அழைக்கப்படுவது,
(1) குத்திசதுத்தகம்ம உபசம்பதா என்றாகும். (2) சரணாகமன உபசம்பதா என்றாகும்.
(3) பஞ்ஹப்யாகரண உபசம்பதா என்றாகும். (4) துதென உபசம்பதா என்றாகும்.
(5) ஓவாத படிக்கஹண உபசம்பதா என்றாகும்.

28. "மஹண மஹலு பவித்த" என்பது,
(1) சாமணேர நிலையை அடைதல்
(2) வயோதிப வயதில் துறவு நிலைக்குட்படல்
(3) அதிசீல நிலையை அல்லது உபசம்பதா நிலையை அடைதல்
(4) வயோதிப வயதில் உபசம்பதா நிலையை அடைதல்
(5) உபசம்பதா நிலையை அடையாது இருத்தல்

29. "பெண்ணொருவரைப் பற்றிய தேடுதலை விட தன்னைப் பற்றிய தேடுதல் மேலானது" என புத்தரால் உபதேசிக்கப்பட்டது
(1) யசகுல புத்திரருக்கு (2) யசகுல புத்திரரின் நண்பர்களுக்கு
(3) உபதிஸ்ஸ, கோலித ஆகிய இருவருக்கும் (4) பத்தவக்கிய இளவரசர்களுக்கு
(5) நந்த இளவரசருக்கு

30. பிக்கு சங்கம் விரும்பினால் குத்தானுகுத்தக சிக்ஷாபதத்தை மாற்றிக் கொள்ளலாம் எனப் புத்தர் பரிநிர்வாணம் அடையும் நேரம் நெருங்கிய போது போதித்தார் என வண. ஆனந்த தேரர் முதலாவது பௌத்த மகாசபையில் சங்கத்தினருக்கு அறிவித்தார். அது தொடர்பில் நிகழ்ந்த கலந்துரையாடலில் குத்தானுகுத்தக சிக்ஷாபதம் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானமாவது,
(1) பாராஜிகா தவிர்ந்த ஏனைய சகல சிக்ஷாபதங்களும் குத்தானுகுத்தக சிக்ஷா பிரிவிற்குரியவை.
(2) பாராஜிகா, சங்காதிஸேஸ ஆகியவற்றைத் தவிர்ந்த எனைய சகல சிக்ஷாபதங்களும் குத்தானுகுத்தக சிக்ஷாபதப் பிரிவிற்குரியவை.
(3) பாராஜிகா, சங்காதிஸேஸ, அனியத்த ஆகியவற்றைத் தவிர்ந்த எனைய சகல சிக்ஷாபதங்களும் குத்தானுகுத்தக சிக்ஷாபதப் பிரிவிற்குரியவை.
(4) எந்தவொரு சிக்ஷாபதப் பிரிவும் குத்தானுகுத்தகவாகப் பிரிக்கப்படக்கூடாது.
(5) குத்தானுகுத்தக சிக்ஷாபதம் பற்றி புத்தரிடத்து கேட்டறிந்து கொள்ளாமை வண. ஆனந்த தேரரின் தவறாகும்.

31. உள்நாட்டு, வெளிநாட்டு மாணவர்கள் பெருமளவு எண்ணிக்கையில் கல்வி கற்ற நாலந்தா பல்கலைக்கழகத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஒரே தடவையில் விடுதி வசதிகள் வழங்கப்பட்டதாக அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன. அவ்வாறு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதற்கான காரணம்,
(1) எல்லா மாணவர்களும் விடுதியில் தங்கவேண்டும் எனும் பல்கலைக்கழகச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தமை
(2) மக்களற்ற பிரதேசத்தில் பல்கலைக்கழகம் அமைந்திருந்தமை
(3) பல்கலைக்கழகத்தில் போதுமானளவு விடுதி வசதிகள் காணப்பட்டமை
(4) சகல மாணவர்களும் வெளிநாட்டவர்களாயிருந்தமை
(5) இந்தக் காலத்தில் இந்தியாவில் விடுதி வசதிகள் கொண்ட வேறு பல்கலைக்கழகங்கள் இல்லாதிருந்தமை

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**32.** தச அகப வஸ்துவிற்குரியதான 'ஆசிண்ணகப்ப' என்பதனால் கருதப்படுவது,
(1) வலிதானது, வலிதற்றது என்று ஆராயாமல் குரு பரம்பரையினரால் பயிற்றுவிக்கப்படுவனவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
(2) நொதிக்காத கள் அருந்துதல் சரியானது.
(3) பாலுமல்லாத தயிருமல்லாததைக் குடிப்பது சரியானது.
(4) சூரியாஸ்தமனத்தின் பின்னர் ஒருவரின் நிழல் இரண்டு அங்குலமாகும் வரை உணவு உண்ணலாம்.
(5) ஒரு கிராமத்தில் ஒருமுறை உணவு உண்ட பின்னர் இன்னொரு கிராமத்திற்குச் சென்று இன்னொரு முறை உணவு உண்ணலாம்.

**33.** மூன்றாவது பௌத்த மகாநாட்டின் பின்னர் நான்கு நாடுகளுக்குச் சமயத் தூதுவர்களை அனுப்ப வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது,
(1) மொக்கலீபுத்த திஸ்ஸ தேரரின் சிபார்சின்படி ஆகும்.
(2) அசோகச் சக்கரவர்த்தியின் கோரிக்கையின்படி ஆகும்.
(3) மகா தம்மரிக்கித தேரரின் கோரிக்கையின்படி ஆகும்.
(4) சோண, உத்தர தேரர்களின் கோரிக்கையின்படி ஆகும்.
(5) மகிந்த தேரரின் கோரிக்கையின்படி ஆகும்.

**34.** ஸ்ரீ சங்கபோ மன்னன் தவறு செய்தவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படுமென்பதைக் காட்டுவதற்காக இரகசியமாகச் சுடுகாட்டிலிருந்து இறந்த உடல்களைக் கொண்டு வந்து பொதுமக்கள் காணக்கூடிய இடத்தில் தொங்க வைத்து தவறு செய்தவர்களுக்கு அறிவுரை கூறி அவர்களை விடுதலை செய்தது,
(1) அக்காலத்தில் இலங்கையில் 'மாகாதா' கட்டளை நடைமுறையில் இருந்தமையால்
(2) அரசன் பஞ்சசீலத்தைப் பின்பற்றி ஆட்சிசெய்து வந்தமையால்
(3) அரச நிர்வாகத்தில் அரசன் பலவீனமடைந்தவனாக இருந்தமையால்
(4) அரசனின் உளவாளிகள் செய்த தவறுகளை மறைத்து வைக்கவேண்டியதொரு தேவை இருந்தமையால்
(5) தண்டனையளித்தல் பௌத்த முறைமைக்கு பொருந்தாது என்பதனால்

**35.** இறந்த ஆவிகள் பற்றிய நம்பிக்கைக்குப் புதிய அர்த்தம் கற்பிக்கும் வகையில் மகிந்த தேரர் நிகழ்த்திய போதனையாவது
(1) சுல்லஹத்தீபதோபம சூத்திர போதனை
(2) பெதவத்து விமானவத்து போதனை
(3) ஆஸிவிஸோபம சூத்திர போதனை
(4) ஸச்ச ஸம்யுத்த சூத்திர போதனை
(5) தம்மசக்கபவத்தன சூத்திர போதனை

**36.** பண்டுகாபய மன்னன் சித்தராஜயஷனுக்கு அபயவாவியின் தாழ்நிலப்பகுதியில் இருப்பிடமொன்றை அமைத்துக் கொடுத்து நன்றி தெரிவித்தமைக்கு முக்கிய காரணம்
(1) சிறு பராயத்தில் அரசனது வாழ்வைக் காப்பாற்றியமை
(2) அரசனுக்கு யுத்தங்களில் வெற்றி பெற உதவியமை
(3) அரசனின் பணியாளனாக சேவை செய்தமை
(4) அரசனது தந்தையின் பாதுகாவலராக இருந்தமை
(5) அரசனது தாயின் பாதுகாவலராக இருந்தமை

**37.** வலகம்பா மன்னனால் நிர்மாணிக்கப்பட்டு வழிபடப்பட்ட அபயகிரி விகாரையைப் பொறுப்பேற்ற வண. திஸ்ஸ தேரரை மகாவிகாரையிலிருந்து வெளியேற்றத் தீர்மானிக்கப்பட்டதற்கான காரணம் அவர்,
(1) மகா விகாரை பிக்குகளின் அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளாமை
(2) அரசியலில் சம்பந்தப்பட்டிருந்தமை
(3) ஒழுக்கநெறிக்கு எதிராகச் செயற்பட்டமை
(4) வலகம்பா மன்னனுக்கு பக்கச்சார்பாகச் செயற்பட்டமை
(5) மகா விகாரைக்கு எதிராகக் கட்டப்பட்ட புதிய மடத்தைப் பொறுப்பேற்றமை

**38.** மொன்குத் மன்னனின் செயற்பாடுகளினால் தாய் பிக்குசங்க சமூகமானது மகாநிகாய, தம்ம யுக்திக நிகாய என இரண்டாகப் பிரிந்தது. ஒரே பிக்கு மரபினை இவ்வாறு இரண்டாகப் பிரிந்ததன் மூலம் அரசன் எதிர்பார்த்தது,
(1) ஒழுக்கநெறிச் சட்டங்களைக் கடுமையாகப் பேணுவதற்கு உற்சாகப்படுத்துதலையாகும்.
(2) மடங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதலையாகும்.
(3) மடங்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு உற்சாகப்படுத்துதலையாகும்.
(4) இல்லறத்தவர்களுக்கும் பிக்குகளுக்குமிடையிலான உறவினை மேலும் வலுப்படுத்துதலையாகும்.
(5) பிக்குகளின் கடமைகளை முறைப்படி செய்தலையாகும்.

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



**39.** இலங்கைக்கும் பர்மாவுக்குமிடையே கலாசார உறவுகள் அதிகமாக விருத்தியடைந்திருந்த காலமென முதலாம் விஜயபாகு ஆட்சிக் காலத்தைக் குறிப்பிடமுடியும். இக்காலத்தில் சாசனரீதியாக நிகழ்ந்த முக்கியமானதொரு நிகழ்வு,
(1) பர்மாவிலிருந்து பிக்குகள் குழுவொன்றை வருவித்து சாசனச் சீர்த்திருத்தமொன்றை மேற்கொண்டமை
(2) இலங்கைக்கு உத்தராஜீவ, சப்பத பிக்குகள் வருகை தந்தமை
(3) பர்மாவில் சீஹல சங்க நிகாய ஆரம்பிக்கப்பட்டமை
(4) பர்மிய பிக்குகள் குழுவொன்று உபசம்பதாவிற்காக இலங்கைக்கு வருகை தந்தமை
(5) பர்மாவில் கல்யாணி சீமா தாபிக்கப்பட்டமை

**40.** பர்மிய ஆட்சியாளர்களுள் அரசராவதற்கு முன்னர் பிக்குவாக இருந்தவர்.
(1) தம்ம சேதிய மன்னன் (2) கெயங்சித்த மன்னன்
(3) அனவ்ரத மன்னன் (4) மிங் டொங் மிங் மன்னன்
(5) மொன்குத் மன்னன்

**41.** பர்மா நாட்டிற்குப் பௌத்த சமயம் அறிமுகம் செய்யப்பட்டமை பற்றிக் குறிப்பிடும் இலங்கை மூலாதாரம்
(1) மகாவம்சம் (2) தூப வம்சம் (3) போதி வம்சம்
(4) தாது வம்சம் (5) அத்தனகலு வம்சம்

**42.** புத்தர் காலத்துக்கு முந்திய காலத்தில் யப்பானில் நிலவிய சமய நம்பிக்கையாகக் கருதப்படுவது
(1) நாத் வழிபாடு (2) கொன்பியூஸியஸ் நெறி (3) ஷின்தோ நெறி
(4) தாவோ நெறி (5) பொன் நெறி

**43.** மிங்தி சக்கரவர்த்தி காலத்தில் சீன தேசத்தில் பௌத்த சமயத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னின்று செயற்பட்ட சமயத்தூதர்களான இரண்டு பிக்குகளின் பெயர்களாவன,
(1) காஷ்யப மாதங்க தேரர், தர்மரக்ஷ தேரர் (2) பாஹியன் தேரர், ஹியுங்ஸாங் தேரர்
(3) போதிதர்ம தேரர், சாந்தரக்ஷித தேரர் (4) ஸோண தேரர், உத்தர தேரர்
(5) குமார ஜீவ தேரர், பத்ம ஸம்பவ தேரர்

**44.** யப்பானில் பௌத்த சமயத்தின் பொற்காலம் எனக் கருதப்படுவது ஷோதொகுதயிஷி அல்லது உமயதோ இளவரசர்களின் காலமாகும். பௌத்த சமய வளர்ச்சி குறித்து அவர் அறிமுகம் செய்த புதிய அரசியலமைப்பில் அடங்கியுள்ள உறுப்புரைகளின் எண்ணிக்கை,
(1) பன்னிரண்டு (2) பதினான்கு (3) பதினாறு (4) பதினேழு (5) இருபது

**45.** தொல்பொருள் சான்றுகளின்படி முதலாவது புத்தர் சிலை நிர்மாணிக்கப்பட்ட மரபாகக் கருதப்படுவது
(1) மதுரா மரபு (2) காந்தார மரபு (3) அமராவதி மரபு
(4) பல்லவ மரபு (5) குப்த மரபு

**46.** இலங்கையில் அமர்ந்த நிலை புத்தர் சிலைகளில் காணப்படும் மிகவும் பிரசித்தமான முத்திரை
(1) விதர்க முத்திரை (2) வரத முத்திரை (3) பூமிஸ்பர்ஷ முத்திரை
(4) தர்மசக்கர முத்திரை (5) தியான முத்திரை

**47.** புத்தர் சிலையை மனித உருவமைப்பில் அமைப்பதற்கு முன்னர் புத்தருக்குப் பதிலாக பல்வேறு குறியீட்டு வடிவங்கள் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறு **பயன்படுத்தப்படாத** குறியீட்டு வடிவம்,
(1) ஊர்ணரோம தாது (2) புனித காலடி (3) தர்மசக்கரம்
(4) ஆஸன (நிலை) (5) போதி மரம்

**48.** தூபியைப் பாதுகாப்பதற்காக சிங்களக் கலைஞரால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடக் கலையம்சம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
(1) அட்டதாகே (2) ஹெ(ட்)டதாகே
(3) சைத்திய சாலை (4) வட்டதாகே
(5) கெடிகே

**49.** இலங்கையின் வரலாற்று இலக்கியங்களின்படி மகிந்ததேரரின் வருகையின் பின்னர் இந்நாட்டில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது ஸ்தூபியான தூபாராமயவில் வைக்கப்பட்ட புனித தாது
(1) அகு தாது (2) படீ தாது (3) லலாட தாது
(4) கிரீவா தாது (5) பாத்ரா தாது

**50.** புத்தரின் குணங்களைத் தொனிப்பொருளாகக் கொண்டு குருலுகோமீயினால் ஆக்கப்பட்ட அமாவதுர நூலுக்கு தொனிப்பொருளாக அமைந்தது
(1) அரஹங் குணம் (2) ஸம்மா ஸம்புத்த குணம்
(3) ஸுகத குணம் (4) புரிஸதம்ம சாரதீ குணம்
(5) ஸத்தா தேவமனுஸ்ஸானங் குணம்

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

AL/2017/45/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

බෞද්ධ ශිෂ්ටාචාරය II
பௌத்த நாகரிகம் II
Buddhist Civilization II

45 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

* **பகுதி I** இல் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இல் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் வீதம் உரித்தாகும்.

## பகுதி I

**1.** (i) பிராமண வர்ணத்தினருக்கென விதிக்கப்பட்டிருந்த ஸ்வதர்மத்தை எடுத்துக்காட்டுக.

(ii) யாகமொன்று முழுமையடைவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகளைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

(iii) பிராமண போதனைக்கு அமைவாக சூத்திர வர்ணத்தவருக்கு **விலக்களிக்கப்பட்டிருந்த ஐந்து** செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

(iv) நிகண்டநாதபுத்தரின் அடிப்படை போதனைகளைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

(v) பிராமண போதனைகளை மறுதலிப்பதற்காக சிரமண மரபினர் முன்வைத்த ஆதாரங்களை எடுத்துக்காட்டுக.

**2.** (i) பிராமண போதனையின்படி பெண்களுக்கு **விலக்களிக்கப்பட்டிருந்த** வரப்பிரசாதங்கள் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்க.

(ii) ஆன்மீக விருத்திக்கு பெண்மை இடையூறாகாது என்பதை பௌத்த போதனையின் அடிப்படையில் நிரூபிக்குக.

(iii) புத்தர் கால கோசல ராச்சியம் பற்றிய அறிமுகமொன்று தருக.

(iv) குடும்ப அமைப்பின் தோற்றம் பற்றி பௌத்த மூலாதாரங்களின் துணையுடன் எடுத்துக்காட்டுக.

(v) 'தஸராஜதர்மங்களைச்' சரியாகப் பெயரிடுக.

**3.** (i) 'சதர அகதி' பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

(ii) சிகாலோவாத சூத்திரத்தின்படி கணவன், மனைவி ஆகியோரின் கடமைகளையும் பொறுப்புக்களையும் பட்டியலிடுக.

(iii) வெட்கம் (ஹிரி), பயம் (ஒதப்) என்பவற்றை கவனத்திற் கொள்ளாத சமூகத்தில் காணக்கூடிய வீழ்ச்சிக்கான இயல்புகள் **ஐந்தினை** எடுத்துக்காட்டுக.

(iv) 'வஸலகரண தர்மங்கள்' **எட்டினைப்** பெயரிடுக.

(v) 'கல்யாண மித்ததாவ' என்பதனை உரிய மூலாதாரங்களின் துணையுடன் விளக்குக.

## பகுதி II

**4.** (i) 'ஸாவகசங்க' சமூகக் கட்டமைப்பு பற்றிப் போதுமானளவு விவரணம் ஒன்று தருக.

(ii) ஆரிய மார்க்கத்தை விருத்தி செய்வதற்கு 'ஆகாரவதீ சிரத்தா' உதவும் வகையினைப் பரிசீலிக்குக.

(iii) 'சூழல் பாதுகாப்பு' பற்றி பௌத்த போதனைகளில் காலத்துக்கேற்ற விதத்தில் வழங்கப்படும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுக.

(iv) புத்தர் இயற்கையழகினை எவ்வாறு அனுபவித்தார் என்பதனை விளக்குக.

**5.** (i) 'புரிஸதம்ம ஸாரதீ' எனும் புத்தரின் குணப்பண்பை உதாரணங்களுடன் விவரிக்குக.

(ii) முன்மாதிரியான தலைமைத்துவத்துக்கு அடிப்படையாக அமைய வேண்டிய குணப்பண்புகளை புத்தரின் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டு வெளிப்படுத்துக.

(iii) புத்தர், தர்ம போதனைகளின் போது பயன்படுத்திய பலவித நெறிமுறைகளை எடுத்துக்காட்டுக.

(iv) உள்ளதை உள்ளவாறு உணர்ந்து கொள்வதற்கு 'விதர்சனா' தியானத்தைப் பயன்படுத்துதல் பற்றி எடுத்துக்காட்டுக.

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**6.** (i) சுதந்திர சிந்தனைக்கு பௌத்த சமயம் உதவுமாற்றை எடுத்துக்காட்டுக.

(ii) 'பௌத்த பப்பச்சாவ' இன் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றிச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

(iii) மழைக்கால வாசம் (வஸ்ஸ வாஸ) பற்றியும் அதனுடன் தொடர்படைய சமய மரபுகள் பற்றியும் போதுமானளவு விவரணமொன்றைத் தருக.

(iv) இந்தியாவில் பிரபல்யம்மிக்க பழமையான பௌத்த பல்கலைக்கழகங்களைப் பெயரிட்டு, வலபி பல்கலைக்கழகம் பற்றி மதிப்பிடுக.

**7.** (i) புத்தர் பரிநிர்வாணம் அடைந்த போது தர்ம மாநாடு ஒன்றின் அவசியம் எழுந்திருந்தது என்பதற்கான சான்றுகளை எடுத்துக்காட்டுக.

(ii) "தர்ம சாசனத்தின் நீண்டகால நிலைபேறே தர்ம சங்காயனா ஒன்றின் நோக்கமாயிருந்தது." இரண்டாம் தர்ம மாநாட்டினை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க.

(iii) 'குளமும் - தாதுகோபுரமும்', 'கிராமமும் - பன்சலையும்' (வெவய் - தாகபய், கமய் - பன்சலய்) எனும் எண்ணக்கருவுடன் இணைந்த விதத்தில் புராதன இலங்கைச் சமூகத்தின் லௌகீக, ஆன்மீக விருத்தி வெளிப்படுத்தப்பட்டிருந்த விதத்தை எடுத்துக்காட்டுக.

(iv) 'ஸென்' என்பது புத்த சமயத்தின் மூலம் ஜப்பான் கலாசாரத்திற்குக் கிடைத்த முன்மாதிரியொன்றொகும் என்பதனை மதிப்பிடுக.

**8.** (i) பௌத்தத்திற்கு முன்னர் இலங்கைத் தீவில் நிலவிய வழிபாடுகள், நம்பிக்கைகள் என்பன பௌத்த சமயத்தினால் வடிவமைக்கப்பட்ட வகையினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(ii) புத்த சிலையின் ஆரம்பம் பற்றி நிலவிய அபிப்பிராயங்களைச் சுருக்கமாக எடுத்துக்காட்டி காந்தார, மதுரா புத்த சிலைகளுக்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை எடுத்துக்காட்டுக.

(iii) 'பட்டிமாகர' என்பது புராதன இலங்கையின் கட்டடக்கலையின் விசேடதன்மையை வெளிப்படுத்தி நிற்பதொன்றாகும்.' நிரூபிக்குக.

(iv) இலங்கையின் வரலாற்று இலக்கியம் (வம்சகதா சாகித்ய) தோற்றம் பெற்றதில் பௌத்த பூசனைக்குரிய பொருள்கள் காரணமான விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.

***

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk